Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 27 ஆம் நாள் துல்கஃதா 25 (9-4-64) வியாழக்கிழமை இதழ் 59

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

தமிழரசுக்கட்சி

# இரு எம். பி. க்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை?

## கட்சிக்கட்டுப்பாட்டை மீறுவதாக வாலிப முன்னணி புகார்

யாழ்ப்பாணம், புதன்

**தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இருவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் அமைந்து நடப்பதில்லையென்றும் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிர்ப் பிரசாரங்கள் நடாத்துகின்றனர் என்றும் கட்சியின் வளர்ச்சிக்கு இடை யூறாகவிருக்கும் இவர்கள் இருவர்மீதும் உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியைக் கேட்டுக்கொள்வதென்று தமிழரசு வாலிப முன்னணியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.**

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னணியின் தலைவர் திரு. செல்லையா தலைமை வகித்தார். இக் கூட்டத்தின் பார்வையாளராக வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ அமிர்தலிங்கம் சமுகமளித்தார்.

தமிழரசு வாலிபமுன்னணியின் வருடாந்த மகாநாட்டை அடுத்த மாதம் கிளிநொச்சியில் நடத்துவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கபபட்டது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'காயத்தைதுணியால்கட்டியதும் போஸ்ட்மாஸ்டர் மரணமானர்'

### ஒட்டிசுட்டான் கொலை வழக்கில் தபால் சேவகர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஒட்டிசுட்டான் கொலைவழக்கு நேற்றுக்காலை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சம்பவத்தை நேரில் கண்டதாகக் கூறும் ஜோசைப்பிள்ளை சண்முகம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 63-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி வவுனியா பகுதியைச் சேர்ந்த ஒட்டிசுட்டானில் சோமசுந்தரம் சந்திரசேகரம் என்பவர் ஓய்வு பெற்ற சப்போஸ்ட்மாஸ்டர் கே. சிதம்பரப்பிள்ளையை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. ஏ. சொக்கலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக திரு. ரி. எஸ். ஆனந்தகுமாரசாமி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி. சில்வா வழக்கை நடத்தினர்.

ஜோசைப்பிள்ளை சண்முகம் சாட்சியமளித்தபோது கூறியதாவது: 2 மணியளவில் நான் சயிக்கிளில் கடைக்குச் சென்று கொண்டிருந்தேன். மாங்குளம்-முல்லைத்தீவு வீதியினுல் முல்லைத்தீவு நோக்கி சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னுல்போஸ்ட்மாஸ்டர்சிதம்

(6-ம் பக்கம் பார்க்க)

## அடுத்தவார கூப்பன் அரிசி இவ்வாரத்திலேயே கிடைக்கும்

### புதுவருட தினத்தை முன்னிட்டு நடவடிக்கை

நல்லூர், வியாழன்

புது வருடத்தினத்தை முன்னிட்டு அடுத்தவாரத்திற்குரிய கூப்பன் அரிசியும் இவ் வாரத்திலேயே கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுவருடதினத்தில் பொதுமக்கள் உபயோகத்திற்கு உதவிசெய்யும் வகையில் அடுத்தவாரக் கூப்பன் அரிசியை இவ்வார இறுதியிலேலே கூப்பன் கடைகளிலே பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாரத்துக்கு வழங்கப்படும் 77-வது கூப்பன் அரிசியுடன் 78-ம் வாரத்திற்குரிய கூப்பன் அரிசி சனிக்கிழமை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு கூப்பனுக்கு இரண்டரை அவுன்ஸ் வீதம் சர்க்கரையும் இவ்வாரத்தில் வழங்கப்படுகின்றது. சர்க்கரை ஒரு இருத்தல் 54 சதமாக விற்கப்படுகிறது.

இவ்வாரக் கூப்பனுக்கு பச்சரிசியே . வழங்கப்படுவது பொதுமக்கள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

## தொழிலாளர் தொடர்பில்லா அரசாங்கத்தை ஆதரியோம்

### கண்டியில் பாலா தம்பு

கொழும்பு, புதன்

"வெறும் சலசலப்புக்கோ அல்லது சர்வாதிகாரத்துக்கோ நாம் அஞ்சமாட்டோம். சுதந்திரக்கட்சி அரசாங்கமாகவோ அல்லது யு. என். பி. அரசாங்கமாகவோ இருந்தாலும்சரி தொழிலாளர் வர்க்கத்துடன் நேரடியான தொடர்பில்லாத எந்த அரசாங்கத்துக்கும் நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராகவில்லை; இடதுசாரித் தலைவர்களைக் கொண்ட கூட்டு அரசாங்கம் அமைக்க உதவவும் மாட்டோம்" என்று கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் லங்கா சமசமாஜக்கட்சி பிரமுகரும்,

(5-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த சின்னங்கள் ஜப்பானை அடைந்தது

கொழும்பு, புதன்

இலங்கை அன்பளிப்புச் செய்து இங்கிருந்து சென்ற திங்கட்கிழமை கொண்டு செல்லப்பட்ட பௌத்த சின்னங்கள் இன்று ஜப்பானின் தலைநகரான டோக்கியோ வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி கலாசார அமைச்சர் திரு. பி. பி. ஜீ. கலுகல்ல தலைமையில் 7 பேர் கொண்ட தூதுகோஷ்டி இலங்கையிலிருந்து இந்த பௌத்த சின்னங்களை அங்கு எடுத்துச்சென்றது.

## கம்யூனிஸ்ட் வாலிபர் மகாநாடு

### யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

நல்லூர், வியாழன்

கம்யூனிஸ் வாலிபர் சங்கத்தின் வருடாந்த மகாநாடும் பகிரங்கக் கூட்டமும் வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

பகிரங்கக் கூட்டத்தில் திரு. பீட்டர் கெனமன், திருமதி விவியன் குணவர்த்தன, திருவாளர்கள்: ஸ்டான்லி திலகரத்தின, சரத் முத்தட்டுகம ஆகியோர் கலந்து கொள்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. நகரமண்டபத்தில் இருந்து முற்றவெளி மைதானம் வரை ஊர்வலம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

சுப்ரீம்கோர்ட்

## மின்சாரத் தடையினுல் விசாரணை தாமதம்

### நீதியரசர் கண்டனம்

யாழ்ப்பாணம் வியாழன்

யாழ்ப்பாணம் நகரமண்டபத்திற்கு மின்சார விநியோகம் தடைபட்டது காரணமாக நேற்றுக் காலை 9-15 மணிக்கு ஆரம்பிக்கவேண்டிய சுப்ரீம் கோர்ட் விசாரணை அரைமணி நேரம் தாமதமாகி ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மாநகரசபையின் மின்சார சுப்பிரின்ரெண்டனும், போர்மனும் நீதியரசரின் கண்டனத்திற்குள்ளானர்கள்.

கொழும்புவிட்டெரியும்

(6-ம பக்கம் பார்க்க)

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

### மணிவாக்கு

எந்தவிதமான கூடாத பழக்கங்களையும் கடவுள் அருளின் உதவியால் தகர்த்துவிட முடியும்.
— பிஷப் புல்டன்ஷீன்


ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

வாழுபபலைசுமசோபகிருதுஆண்டு பங்குனி மீ 27௳ (9-4-64)


## "காஷ்மீர் சிங்கம்" விடுதலை

சென்ற சுமார் பத்து ஆண்டுகளாக சிறைப்பட்டிருந்த "காஷ்மீர் சிங்கம்" ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பெற்றுள்ளது பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கதாகும். இதனால் காஷ்மீர் பிரச்சினை சுமுகமாகத் தீர உதவுவதுடன், இந்திய-பாகிஸ்தான் பிரச்சினைகளும்கூட நல்லபடியாகத் தீரவும் வழிபிறக்கக்கூடும்.

ஷேக் அப்துல்லா விடுதலையானதும் புதுடில்லி சென்று பிரதமர் நேருவைக் காண்பதுடன், ராவல்பிண்டிக்குச் சென்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கானையும் கண்டு பேசக்கூடுமென்று செய்திகள் கூறுகின்றன. இதிலிருந்து அவர் இவ்விரு நாடுகளுக்கும் பொது நண்பர் ஆகின்றார். ஏற்கெனவே சிறைப்படுவதற்கு முன் ஷேக் அப்துல்லாவைப் பாகிஸ்தான் தன் விரோதியாகவே கருதி வந்தது. ஆனால் அவர் சிறைப்பட்டதன் பயனாக பாகிஸ்தானின் இந்த மனப்பான்மை மாறியது. ஷேக் அப்துல்லா பாகிஸ்தானின் நண்பனாகவும் இதற்கிடையே ஆகியுள்ளார்.

பாகிஸ்தானின் நண்பரான காரணத்தால் அவர் இந்தியாவின் விரோதியாகக் கணிக்கப்படத் தேவையில்லை. அவர் பத்துவருடம் சிறைப்பட்டிருந்தும் நேருஜியிடம் குரோதம் கொள்ளாமல் அவரை நேரில் காணச் செல்ல ஆவல் கொண்டிருப்பதே அவரது நல்லெண்ணத்தைக் குறிக்கின்றது. அரசியல் உலகிலே பலபல தவறுகள் நடக்கலாம். அதுவும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளிலே இவ்வித தவறுகள் ஏற்படுவது சகஜம். ஆனால் அத்தவறுகளைத் திருத்திக்கொண்டு, சென்றதை மறந்து பொதுநன்மைக்காகவும் நல்லுறவுக்காகவும் முயலுவதே அரசியல் ஞானிகளுக்கு அழகு.

காஷ்மீர் விஷயம்தான் இந்தியா-பாகிஸ்தான் உறவுகளுக்குப் பெருந் தடையாக நிற்கின்றது. சென்ற 15 வருடங்களுக்கு மேலாக ஐக்கியநாடுகளின் சபையிலும் இப்பிரச்சினை அடிபட்டு உலகம் சிரிக்கின்றது. இதுபற்றி இந்தியாவோ பாகிஸ்தானோ அல்லது காஷ்மீரோ பெருமைப்படுவதற்கில்லை. சமீபத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களுக்கும்கூட இந்தப் பிரச்சினைதான் மறைமுகமான காரணமெனின் அது தவருகாது. இப்போது புதுடில்லியிலே இருதேச உள்நாட்டு மந்திரிகளும் கூடி நடத்தும் பேச்சுகள் மிக முக்கியமானவை. இப்பேச்சுகள் வெற்றிபெற இருசாரினருக்கும் பொது நண்பர் ஒருவர் தேவையாகும். அந்தத் தேவையை ஷேக் அப்துல்லா நன்கு பூர்த்தி செய்வாரென்று நம்புவது மிகையல்ல.

பாகிஸ்தானிலிருந்து சுமார் இரண்டு லட்சம்பேர் வெளியேறி அகதிகளாகத் தவிப்பதும் அவர்களுக்கு உடனடியாகக் கஷ்டநிவாரணம் அளிப்பதும், இருதேசங்களிலுமுள்ள சிறுபான்மையோர் நிம்மதியாகபயமின்றிவாழச்செய்யவும் வேண்டியது மிக முக்கியமானதும்கஷ்டமானதுமானபிரச்சினை. பாகிஸ்தானிலிருந்து வெளியேறியஅகதிகளுள் இந்துக்கள் மட்டுமன்றி, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும்கூட இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. "இஸ்லாமிய குடியரசு" என்ற பாகிஸ்தானின் பெயர் சமீபத்தில் மாற்றப்பட்டபின் அந்நாட்டிலுள்ள முஸ்லிமல்லாதவர்கள் இரண்டாம் பட்சப் பிரஜைகளானதுடன் அவர்கள் நிலை மிகவும் மோசமாகிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றியெல்லாம் நிதானமாக ஆராய்ந்து இதற்குத் தக்க பரிகாரம் தேடுவது சுலபமான காரியமல்ல.

இச்சமயத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க பத்திரிகைகளில் சில 'சாக்குருவி சோதிடம்' கூறி, நிலைமையை மோசமாக்க முற்படுவது மிகவும் வருந்தத்தக்கது. ஷேக் அப்துல்லாவின் விடுதலை இந்தியாவின் நிலைமையை மோசமாக்குமென்றும் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு எடுக்க வேண்டுமென்றும் 'அப்சர்வர்' முதலிய பத்திரிகைகள் எழுதுகின்றன. இந்த விஷமங்களைபற்றி இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் இம்மூன்று நாடுகளும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அரும்பாடுபட்டுக் கிடைத்த அரசியல் சுதந்திரத்தால் மக்களுக்கு நன்மை ஏற்படச் செய்வதே அரசியல் ஞானிகளுக்கும் தேசாபிமானிகளுக்கும் அழகு. போதும் இதுவரை மக்கள் பட்ட துன்பங்கள். ஷேக் அப்துல்லாவின் விடுதலை, காஷ்மீர் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதுடன் இந்தியாவும் பாகிஸ்தானும் புதிய நல்லுறவுடன் ஒத்துழைக்கும் புதிய சகாப்தம் இனி ஆரம்பமாகுமென்றும் நம்புவோம்.

## மாதர் நிலையதிறப்பு விழா

சுழிபுரம், புதன்

வட்டு சிவன் மாதர் சங்க புதிய நெசவு கட்டிடத் திறப்பு விழாவும் 6-வது ஆண்டு நிறைவு விழாவும் டாக்டர் குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. புதிய கட்டிடத்தை டாக்டர் என். குமாரசாமி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

ஆண்டு விழாவில் புலவர் கா. வேல்முருகன், த. சுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்; சங்க மாணவிகளின் கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## ஷாவின் விஜயம்

புவனர்ஸ்அயர்ஸ், ஏப். 8

இவ்வருட இறுதியில் ஈரான் மன்னர் ஷா, ஆர்ஜன்டைனுக்கு விஜயம் செய்வார்.

# ரூ. 2½கோடி பெறுமதியுள்ள மாவு, பால் பவுடர்

## இலங்கைக்கு 'கெயர்'ஸ்தாபனம் வழங்கும்

கொழும்பு, புதன்

"கெயர்" ஸ்தாபனத்துடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்ட இரண்டு உடன்படிக்கைகளைத் தொடர்ந்து பாடசாலைக் குழந்தைகளுக்கும் வைத்திய வசதிகளுக்குமாக கெயர் ஸ்தாபனம் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியுள்ள கோதுமை மாவையும் பால் மாவையும் இலங்கைக்கு கொடுக்கவிருக்கிறது.

இதுசம்பந்தமான ஓர் உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி உதவிக் காரியதரிசி திரு திலக் குணரத்ன கையெழுத்திட்டார். 'கெயர்' ஸ்தாபனத்தின் சார்பில் இலங்கையிலுள்ள 'கெயர்' ஸ்தாபன பிரதம அதிகாரி திரு. ஜோர்ஜ்டி. ரெயிலர் கைச்சாத்திட்டார்.

இந்த உதவித் திட்டத்தின் கீழ், 'கெயர்' ஸ்தாபனம் ஐந்து கோடி பத்து லட்சம் ரூத்தல் நிறையுள்ள கோதுமை மாவையும் ஒரு கோடி முப்பது லட்சம் ரூத்தல் நிறையுள்ள பால மாவையும் இலங்கைக்கு வழங்கும். இந்த உதவி, அடுத்த மாதம் முதல் 12 மாத காலங்களுக்கு வழங்கப்படும்.

# பரீட்சைகளில் ஒழுங்கீனம்: சட்டப்படி குற்றம்!

கொழும்பு, புதன்

அரசாங்க பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால், அவர்களுக்கு எதிராக சட்ட பூர்வமான முறையில் நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டு வரப்படவிருக்கிறது. இச்சட்டம் பார்லிமென்டில் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது. இதன் மூலம், அரசாங்க பரீட்சைகளின் போது ஒருவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் அவர் மீது வழக்காட அல்லது அவருக்கு தண்டனை விதிக்க இச்சட்டம் வகைசெய்யம்.

பரீட்சை ஆரம்பிக்கு முன்னர் கேள்வித் தாள்களை வெளியில் விட முயற்சிப்பது அல்லது பரீட்சை சம்பந்தமான இரகசிய விஷயங்களை முன்கூட்டியே வெளியிடுவது போன்றவை இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கணிக்கப்படும்.

அரசாங்க அதிகாரிகளினதும் மற்றும் அதிகாரிகளினதும் ஒழுங்கீனங்களும் இச்சட்டத்தின் கீழ் குற்றமாக்கப்பட விருக்கின்றன.

இதுசம்பந்தமாக கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், புதிய சட்டம் பல நாள் தேவையைப்பூர்த்தி செய்யுமென்று கூறினர். "வழக்கமாக, கல்வி இலாகாவினுல் வருடாவருடம் நடத்தப்படும் பரீட்சைகளில் குறைந்தது ஒரு பரீட்சையையாவது ரத்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் பரீட்சைக் கேள்வித் தாள்கள் முன்கூட்டியே வெளியாவதே. இதனுல் பரீட்சார்த்திகளுக்கு வசதிக்குறைவுகள் ஏற்படுவதுடன் அரசாங்கத்துக்கும் ஏராளமான பணம் செலவாகிறது" என்றும் அந்த அதிகாரி கூறினர்.

பரீட்சைக் கமிஷனர் திரு. எச். எல். விமலசூரியா இது பற்றித் தெரிவிக்கையில், கல்வி இலாகாவினுல் வருடா வருடம் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களின் தொகை வெகுவாக அதிகரித்துக்கொண்டு போகிறதென்றும் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இரு ஜி. ஸி. ஈ. பரீட்சைகளுக்கும் 250,000க்கும் அதிகமான பரீட்சார்த்திகள் மேலதிகமாக தோற்றுகின்றனர் என்றும் கூறினர்.

# யாழ்ப்பாணத்துக்கு மற்றொரு ஆஸ்பத்திரி

## சுகாதார டைரக்டருக்கு ஆஸ்பத்திரிக்கமிட்டி கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் குறைந்தது 500 படுக்கைகளைக்கொண்ட மற்றொரு பெரியாஸ்பத்திரியை அமைக்க விரைவாக நடவடிக்கைகள் எடுக்குமாறு சுகாதாரசேவை டைரக்டரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது.

கமிட்டியின் கூட்டம் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது.

இரண்டாவது ஆஸ்பத்திரியொன்றை அமைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை முதலி

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன 1959-ம் வருஷத்திலே விளக்கமறியலில் இருக்கையில் கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டாராம். அதற்கு முன் தாம் பௌத்தராக இருந்து வந்ததாயும் பின்னர்தான் மதம் மாறியதாயும், பொதுவாகத் தாம் ஒரு கிறிஸ்தவரென்றும் அதில் தனிப் பிரிவு எதையும் சேரவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இதுவரை இச்செய்தி ரகசியமாகவே இருந்துள்ளது ஆச்சரியமே.

ஏற்கனவே விளக்கமறியலில் இருக்கையில் சோமராமாவும் கிறிஸ்தவராக மதம் மாறி, 'பீட்டர்' என்ற பெயரையும் ஏற்றுக் கொண்டது ஞாபகம் வருகிறது. மதம் மாறிய விமலாவும் புதிய பெயர் ஏதாவது வைத்துக் கொண்டாரா என்பது தெரியவில்லை.

* * *

பல மதங்களைப் பற்றியும் ஒரு சமயம் காலஞ்சென்ற பெரிய பண்டாரநாயக்கா சில நண்கர்களுடன் பேசகையில், மற்ற மதத்தவர்கள் கடவுளில் நம்பிக்கை வைத்திருப்பதால் கடைசியாக பற்றிக்கொள்ள அவர்களுக்கு ஏதோ ஒன்று இருப்பதாயும் பௌத்தர்களுக்கு அது இல்லாதது பெரிய குறை என்றும் குறிப்பிட்டார்.

பௌத்தர்களில் பலரும் கதிர்காமத்துக்கும், முருகன் கோவில்களுக்கும் சென்று வழிபடுவததைப் பார்க்கின்றோம். ஏன்? வேறு எவ்வித அதரவு மற்று இருகையில் தெய்வம் என்ற ஒரு பற்றுக்கோடு அவர்களுக்கும் தேவைப்பட்டு இருப்பதால் தானல்லவா? பௌத்த பிக்குகளில் சிலருக்கு இது பிடிக்காதென்றுலும், பௌத்த பொது மக்களிடையே தெய்வபக்தியும் நம்பிக்கையும் பரவி அதிகரித்து வருவதைப் பார்க்கின்றோம்.

விமலவும், சோமராமாவும் ஏன் மதம் மாறினரென்பதற்கான காரணங்கள் விளங்கவில்லை, என்றுலும் இதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்.

* * *

யாழ்ப்பாண முற்ற வெளிக்கூட்டத்திலே ஸ்ரீமதி விவியன் குணவர்த்தன தோன்றி, கைவிரலை ஆட்டி ஆட்டிப் பேசுகையில் ஒரு வீராங்கனை போலிருந்தது. ஆங்கிலத்தில் அவர் கணீரென்று பேசிய பேச்சு உருக்கமாகவும் ஆணித்தரமாகவுமிருந்து பலர் மனதையும் கவர்ந்தது.

"ஆண்கள் மன்னிக்க வேண்டும். நான் ஒரு தாய். தாய்மார்களாகிய பெண்களுக்குத்தான் இன்று விலைவாசிகள் உயர்வினல் ஏற்பட்டுள்ள சங்கடம் சரிவரத்தெரியும். நானே மார்க்கெட்டுக்குச் சென்று சாமான்களை வாங்குகின்றேன். விலைவாசிகள் மிகவும் உயர்ந்துவிட்டன. குழந்தைகளுக்கு நல்ல உணவும் வாங்கி கொடுக்க முடியாமல் பல தாய்மார்கள் மனவேதனைப் பட்டுத் தவிக்கின்றுர்கள். நோய்வாய்ப் பட்டால், மருந்து வாங்கிக் கொடுக்கவும் முடியாமல் சங்கடப்படுகின்றுர்கள்" என்று கூறியது எத்தத்தாயின் உள்ளத்தைத்தான் தொடாது?

பிரதமர் ஸ்ரீமாவோவும் தாம் ஒரு தாய் என்று வெளிநாடுகளிலும் சென்று பேசினர். விவியன் இப்படிக் கூறியதைத் தாயான ஸ்ரீமா மறுக்க முடியுமா?

தெய்வபக்தியால் எல்லாம் முடியுமென்று அமரகவி பாரதியார் பாடியிருக்கிறர். ஆனல்பக்தியால்எல்லாம் முடியுமா? விவாகமாகாத பெண்ணுக்கு விவாகமாகுமா? அதுவும் ஆகும் என்று ஒரு தந்தை தன் அனுபவத்தால் பலர் முன்னும் கூறியதைக் கேட்டேன்.

பெண்ணுக்கு வயது 25-க்கு

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மேலாகிவிட்டது. தக்க வரன் பார்த்துக் கல்யாணம் செய்யாமல் இருக்கிறீர்களே என்று தாய் தினம்தினம் கவலையுடன் இடித்துச் சொல்லுவாராம். "எல்லாம் கடவுள் செயல். அவர் நிறைவேற்றி வைப்பார்" என்று ஆறுதல் கூறுவாராம் பக்தியுள்ள தந்தையார். "அது எப்படி. அரிசி சாமான்கள் இருந்தால்மட்டும் பசி ஆறிவிடுமா? அதை அடுப்பில் வைத்து சமைத்தால் தானே உணவு ஆகும். அதுபோல் கடவுள் உதவினுலும் நாம் முயற்சி எடுக்கத்தானே வேண்டும்?" என்று கேட்பாராம் தாய்.

"அந்த முயற்சியையும் எடுக்கச் செய்வது கடவுளின் செயல்தானே" என்று தந்தை இருந்துவந்தார். அவர்களது பெண்ணுக்கு சமீபத்தில் நல்ல மாப்பிள்ளை கிடைத்துவிட்டார். "நான் கூறியது எப்படி? கடவுள் எல்லாம் செய்யவில்லையா?" என்று தந்தை பெருமையுடன் கேட்க, தாய் உள்ளப்பூரிப்புடன் புன்முறுவல் செய்தார். "நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்பபு, அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்".

* * *

ஊனுகி உயிராகியதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்ருய், நானேதும் அறியாமே யென்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்ருய், தேனுருங் கொன்றையனே நின்றியூராய் திருவானைக்காவிலுறை சிவனே ஞானம், ஆனுயுன் பொற்பாதம் அடையப் பெற்ருல் அல்ல சண்டங்கொண்டடியேன் என் செய்கேனே.—திருநாவுக்கரசர்

# உள்துறை மந்திரிகள் பேச்சுக்களில் நல்ல முன்னேற்றம்

## இரு நாட்டு மந்திரிகளும் மனம்விட்டு பேசினர்

### முக்கிய பிரச்னைகளை ஆராய இரு கமிட்டிகள் நியமிக்கப்பட்டன

புதுடில்லி, ஏப். 8

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏற்படும் இனக்கலவரங்களைத் தடுத்து இருநாடுகளிலும் வாழும் இந்து-முஸ்லிம் மக்களிடையே வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டும் பொருட்டு நேற்று புதுடில்லியில் ஆரம்பமான இந்திய-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகளின் மகாநாடு நல்லசூழ்நிலையில் நடைபெற்றதென்றும் இருநாட்டு அதிகாரிகளும் மனம் விட்டுப் பேசினரென்றும் பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, நேற்று ஆரம்பமான முதல் சுற்றுப் பேச்சுகள் இருநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் திருப்தியை அளித்துள்ளதாக மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மகாநாடு நாளை தொடர்ந்துநடைபெறும்.

**வகுப்பு ஒற்றுமை இருநாடுகள் சம்மதம்**

இருநாடுகளிலும் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்ட துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென இருநாட்டுப் பிரதிநிதிகளும் தெரிவித்துக் கொண்டனர்.

**கமிட்டிகள் நியமனம்**

மகாநாடு, தான் கவனிக்க வேண்டிய பல பிரச்னைகளையும் பரிசீலனை செய்யும் பொருட்டு இருகமிட்டிகள் நேற்று நியமிக்கப்பட்டன. பரிசீலனை செய்யப்படும் முக்கிய மூன்று விஷயங்கள் வருமாறு:

- இந்திய-பாகிஸ்தானில் வாழும் இந்து-முஸ்லிம் மக்களிடையே வகுப்புஒற்றுமையை நிலைநாட்டுதல். சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பளித்தல்.
- அகதிகள் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும். அகதிகள் நடமாட்டத்தைக் குறைக்க நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும்.
- கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு வருபவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

இந்த மூன்று விஷயங்களையும் பரிசீலனை செய்ய இருநாட்டுப் பிரதிநிதிகளும் சம்மதம் தெரிவித்திருந்தபொழுதிலும் மூன்ருவது விஷயத்தில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு வரும் முஸ்லிம்கள்பற்றிய பிரச்னை சேர்க்கப்பட வேண்டுமென்று பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகான் வற்புறுத்திஞர். இக்கமிட்டிகள் இன்று கூடி, மேற்கூறப்பட்ட விஷயங்கள் குறித்து விவாதம் நடத்தும்.

**சாதகமான பதில்**

நேற்றைய மகாநாட்டில் இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால்நந்தா தெரிவித்த பலயோசனைகளுக்கு பாகிஸ்தான் உள்துறைமந்திரி திரு. ஹபிபுல்லாகான் சாதகமான பதில்கள் அளித்தார். சில யோசனைகள் குறித்து தமது அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்த வேண்டுமென்றும் திரு. ஹபிபுல்லா கான் கூறினர்.

**ஹபிபுல்லாகான் பேச்சு**

நேற்றைய மகாநாட்டில் திரு. ஹபிபுல்லாகான் பேசுகையில், களங்கமற்ற மனத்துடன் கருத்துக்களைத்தெவிக்கதாம் வந்திருப்பதாகவும் இருநாடுகளிலும் சமாதானம் நிலைபெற இம்மகாநாடு வழிவகுக்க வேண்டுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினர்.

இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறுவது நிறுத்தப்படல் வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மகாநாடு ஆரம்பிக்கு முன்னரே நாங்கள் மகாத்மாகாந்தியின் சமாதிக்குச் சென்று மலர்வளையம் சாத்தி மரியாதை செலுத்திஞேம். வகுப்பு ஒற்றுமைக்கு மகாத்மாகாந்தி எவ்வளவு பாடுபட்டாரோ அவ்விதம் இம்மகாநாடு இதில் வெற்றிகாண வேண்டுமென்று தான் பிரார்த்தனை செய்து கொண்டேன் என்றும் திரு. ஹபிபுல்லாகான் தெரிவித்தார்.

**ராதாகிருஷ்ணனை சந்தித்தார்**

பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகான் நேற்று மாலை இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து நாற்பது நிமிடங்கள்வரை உரையாடிஞர்.

உள்துறை மந்திரிகள் மகாநாடு இன்று நடைபெறமாட்டாது. இதற்குப் பதிலாக நேற்று நியமிக்கப்பட்ட கமிட்டிகள், முக்கிய மூன்று விஷயங்கள் குறித்தும் விவாதிக்கும். உள்துறை மந்திரிகள் மீண்டும் நாளைக்காலை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள்.

---

## சீனர்கள் வெளிநடப்பு

புடாபெஸ்ட், ஏப். 8

இங்கு நடைபெற்ற சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கத்தின் மகாநாட்டில் கலந்து கொண்ட சீனப் பிரதிநிதிகள் எதிர்பாராத விதமாக மகாநாட்டை விட்டு வெளியேறினர்.

சீனப் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவி ஹன் யுதுங்; "வாருங்கள், எங்களைத் தாக்குங்கள், இதைப் பற்றி நாங்கள் கவலை கொள்ளமாட்டோம். இறுதிவரை நாங்கள் போராடுவோம்" என்று கூறிய வண்ணம் மகாநாட்டைவிட்டு வெளியேறினர். இதனைத் தொடர்ந்து மற்றைய சீனப் பிரதிநிதிகள் தங்களுடைய தஸ்தாவேஜுகளையும், ஒலி கருவிகளையும் எடுத்துக் கொண்டு மகாநாட்டிலிருந்து வெளியேறினர்.

---

## சாரதியில்லா ரயில் சேவை

### லண்டனில் ஆரம்பம்

லண்டன், ஏப். 8

லண்டன் புகையிரதப் பகுதியின் திட்டத்திற்கிணங்க நேற்று முன்தினம் சாரதியில்லா பாதாள ரயில் ஒன்று போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டது. சாரதியில்லாத பாதாள ரயில் சேவை நேற்று முன்தினம் தான் உலகில் முதன்முதலாக ஆரம்பித்தது என்பது குறிப்பிடத் தக்கது.

குறிப்பிட்ட சாரதியில்லா ரயில் தற்பொழுது இரண்டு ரயில்நிலையங்களுக்கிடையே சேவையில் ஈடுபட்டுள்ளது. 1968 ம் ஆண்டில் சாரதியில்லா ரயில்கள் முழுச்சேவையிலும் ஈடுபடுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

லாவோஸ் பிரச்னை

## மூன்று கட்சித் தலைவர்களும் இம்மாதம் 17-ல் சந்திப்பார்கள்

வியண்டைன், ஏப். 8

லாவோஸ் பிரச்னையை சமாதானமாகத் தீர்க்கும்பொருட்டு மூன்று அரசியல் கட்சித் தலைவர்களும் இம்மாதம் 17-ந் திகதி ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார்கள்.

தங்களுக்குள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்தெறியும் பொருட்டு பேச்சுவார்த்தைகள் நடத்துவதென்று கூடிய நடுநிலைமை, இடதுசாரி, வலதுசாரி அரசியல் தலைவர்கள் முடிவுசெய்ததைத் தொடர்ந்து இம்மாதம் 17-ந் தகதி ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் பேச்சுகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'முக்கியமான சந்திப்பு' என்று கருதப்படும் மூன்று அரசியல் கட்சித் தலைவர்களின் பேச்சுகளில் சுமுகமானதோர் தீர்வு ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பேச்சுகளுக்கான ஒழுங்குகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

---

## காஷ்மீர் மக்களுக்கு ஷேக் அப்துல்லாவின் செய்தி

ஜம்மு, ஏப். 8

காஷ்மீர் மக்களுக்கு, திரு. ஷேக் அப்துல்லா விடுத்த ஒரு செய்தியில் இன, மத பாகுபாட்டைக் களைந்தெறிந்து, காஷ்மீர் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. ஷேக் அப்துல்லா நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். இந்தப் பேட்டியில் தான் அவர் மேற்கூறிய கருத்தை வெளியிட்டார்.

பிரதமர் நேருவைச் சந்திப்பீர்களா? என்று நிருபரொருவர் கேட்டதற்கு பிரதம மந்திரி திரு. நேருவைச் சந்திப்பதற்குத் தாம் மிகுந்த ஆசை கொண்டிருப்பதாகவும் அவரைச் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவேண்டுமென்றும் இச்சந்திப்பைத் தடங்கல்செய்வதற்கு எவ்விதமான எதிர்பாராத அம்சங்களும் குறுக்கிடலாகாதென்றும் திரு. ஷேக் அப்துல்லா கூறிஞர்.

நேருவையும் மற்றும் தமது பழைய நண்பர்களையும் சந்திக்கவிருப்பதாகவும் அவர் கூறிஞர்.

வகுப்புப் பிரச்னை குறித்து தன் கருத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு யோசனை தெரிவிக்கப்போவதாகவும் வகுப்பு ஒற்றுமையைச் சீர்குலைக்கும் எல்லா உணர்ச்சிகளையும் ஒழிக்கவேண்டுமென்றும் அவர் கூறிஞர்.

**நேரு கடிதம்?**

திரு. ஷேக் அப்துல்லாவுக்கு பிரதமர் நேரு கடிதமொன்று அனுப்பியுள்ளார் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அந்தக் கடிதத்தின் விபரம் வெளியிடப்படாதபோதிலும், திரு. ஷேக் அப்துல்லாவை டில்லிக்குவரும்படி பிரதமர் நேரு அக்கடிதமூலம் அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

## டாக்டர்களுக்கு சிறை

வட பெல்ஜியம், ஏப். 8

ஹெரின்டல்ஸ் சிகிச்சை நிலையத்தில் 15 மாதக் குழந்தையொன்று மரணமானதைத் தொடர்ந்து இரண்டு பெல்ஜியம் டாக்டர்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர்களின் வேலைநிறுத்தத்தின் விளைவாக, குறிப்பிட்ட குழந்தைக்கு உடனடியாகச் சிகிச்சையளிக்காததால் குழந்தை மரணமானதென்று இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய டேர்ன்ஹௌட் மாஜிஸ்திரேட் தெரிவித்துள்ளார்.

டாக்டர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது, அவசரகால வைத்திய சிகிச்சைகளுக்கு மேற்கூறப்பட்ட இரு டாக்டர்களும் ஆஜராகவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்விரு டாக்டர்களும் குறிப்பிட்ட குழந்தைக்கு உடனடியாகச் சிகிச்சையளிக்காத குற்றத்திற்காக அவர்கள் தற்பொழுது சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

## விண்வெளிக்கப்பல் அனுப்பப்படவில்லை

கேப்கென்னடி, ஏப். 7

கேப்கென்னடி தளத்திலிருந்து நேற்று அனுப்பப்படவிருந்த விண்வெளிக் கப்பல் காலநிலை காரணமாகப் பரீட்சிக்கப்படவில்லை. இப்பரீட்சை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படலாமென்று அறிவிக்கப்படுகிறது.

---

## இதுவன்றோ பண்பு!

சென்னை, ஏப். 8

சென்னை ரரயப்பேட்டையிலுள்ள பீட்டர்ஸ் வீதியில் பீபிஜோன் என்ற பெண், 17 பத்து ரூபாய் நோட்டுகளை கண்டெடுத்தார். தாம் கண்டெடுத்த நோட்டுக்களை அவர் தமது சகோதரரான ஷம்சுதீனிடம் ஒப்படைத்து அந்தப் பணத்தை பொலிஸ் கமிஷனரிடம் சேர்ப்பித்துள்ளார். இதுவன்றோ பண்பு!

---

## கோரிவிட்ச்

நியுயோர்க், ஏப். 6

சமாதான நோபல் பரிசுகளை இருமுறை பெற்ற 74 வயதுள்ள ரஷ்யரான திரு. பொரிஸ் கோரிவிட்ச் இங்குள்ள ஆஸ்பத்திரியில் காலமாஞர்.

---

## விண்வெளி நிலையம்

மியாமி (புளோரிடா), ஏப்.8

கியூபாவுக்கான விண்வெளி நிலையமொன்றை ரஷ்யர்கள் இங்கு கட்டிமுடித்துவிட்டதாக ஹவானு வானெலி அறிவித்துள்ளது.

---

## தென்வியட்னம் தேர்தல்

சைகோன், ஏப். 8

தென்வியட்னமில் ஆறுமாதகாலத்திற்குள் தேர்தல்கள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

சினத்ரா கடத்தல்

## 3-ம் நபருக்கு 16 வருடம் சிறை

லோஸ்ஏன்சல்ஸ், ஏப். 8

கடந்த டிசம்பர் மாதம் பிருங்க் சினத்ரா (ஜூனியர்)வை கடத்திச் சென்ற குற்றத்துக்காக 42 வயதுள்ள ஜோன் ஏர்வினுக்கு 16 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக குற்றவாளிகளாகக் கரணப்பட்ட மேலும் இரு நபர்களுக்கு ஆயுட் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

---

## பூட்டான் பிரதமர் பூதவுடல்

காங்டொக், ஏப். 8

கொலை செய்யப்பட்ட பூட்டான் பிரதமரின் பூதவுடல் நேற்று மாலை தலைநகருக்குக் கொண்டுவரப்பட்டது. நாளை தகனக்கிரியைகள் நடைபெறும் வரை பொதுமக்கள் பார்வைக்காக நகரில் வைக்கப்பட்டுள்ளது.

---

## ராஜீயத் தொடர்புகள்

கெய்ரோ, ஏப். 8

ஐக்கிய அரபுக் குடியரசும் பெல்ஜியமும் தங்களது ராஜீயத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்திக்கொண்டனர் என்று கெய்ரோ வானெலி அறிவித்துள்ளது.

---

## "பிரிட்டிஷ் விமானத்தளத்தை அகற்றுக"

நியுயோர்க், ஏப். 8

ஏடனிலுள்ள பிரிட்டிஷ் இராணுவதளம் அகற்றப்பட வேண்டுமென்று கோரி எட்டு நாடுகள், ஐ. நா. சபையிடம் ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்துள்ளது.

---

## சனசமூகநிலைய புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, செவ்.

காரைநகர் வடக்கு நீலிப்பந்தனை அம்பாள் சனசமூக நிலைய ஆண்டுக் கூட்டம் திரு. கே. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. பரமலிங்கம், உப-தலைவர்: திரு. ச. கதிரவேலு, காரியதரிசி: திரு. வே. இராசநாயகம், தனாதிகாரி: திரு. சு. இராசசேகரம், நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# பிலிப் - பண்டாரநாயக்கா ஒற்றுமை வராதென்பது தெரியும்"

## பண்டாரநாயக்கா கொலை கமிஷன் முன் திருமதி விமலா சாட்சியம்

கொழும்பு, புதன்

"திரு. பிலிப் குணவர்த்தன மார்க்ஸியவாதி திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா ஒரு சோஷலிஸ்ட். இவர்களிருவரும்ஒத்துப்போக மாட்டார்களென்பது எங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரியும்" என்று முன்பு சுகாதார மந்திரியாகவிருந்த திருமதி விமலா விஜயவர்த்தன பண்டாரநாயக்கா கொலைவிசாரணைக் கமிஷன்முன் நேற்று சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

விசாரணைக் கமிஷன் நேற்றுக்காலை கூடியபோது திருமதி விமலா விஜயவர்த்தன வாக்குமூலமளிக்க விரும்புவதாக அவரின் வழக்கறிஞர் திரு. வி. எஸ். பார் குமாரகுலசிங்கம் கமிஷனர்களிடம் தெரிவித்தார். திருமதி விஜயவர்த்தனவை அவரது வழக்கறிஞர் விசாரித்தார்.

பைபிள் மீதுசத்தியம்செய்துவிட்டு திருமதி விமலா சாட்சியமளித்தார். "நான் ஒரு வைதீக பௌத்தராக இருந்தேன். ஆனால் 1959 ம் ஆண்டில் நான் ரிமாண்டில் வைக்கப்பட்டபின் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினேன். நான் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவளல்ல" என்று திருமதி விமலா கூறினார்.

"எனக்கு இப்பொழுது 56 வயது. 1926 ம் ஆண்டு திரு. டி. வி. விஜயவர்த்தனவை மணம் முடித்தேன். எனது சகோதரி இறந்தபின் அவர் என்னை இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார். 1940 ம் ஆண்டில் எனது கணவரின் சகோதரர்திரு. வால்டர் விஜயவர்த்தனகாலமானபின் களனி ஆலய நிர்வாகத்தை பெரும்பாலும் என் கணவரே நடத்திவந்தார். அப்பொழுது தம்மரகித்த தேரோ ஆலயத்தின் பிரதம குருவாக இருந்தார். தம்மரகித்த தேரோ எனதுகணவர்வீட்டுக்கு அடிக்கடி வந்து ஆலய நிர்வாக வேலைகள் பற்றி ஆலோசனை செய்வதுண்டு. தம்மரகித்த தேரோவுக்கு சங்கரகித்த, புத்தரகித்த என இரண்டு சிஷ்யர்கள் இருந்தனர். 1947-ம் ஆண்டில் தம்மரகித்த காலமானர். அதன் பின் சங்கரகித்ததான் முறைப்படி பிரதம குருவாக வேண்டும். ஆனால் தம்மரகித்த தமக்குப்பின் புத்தரகித்தாவையே பிரதம குருவாக்குமாறு சாகும் தறுவாயில் எனது கணவரிடம் கூறியிருந்தார். தாயகசபையின் ஒரு பிரிவு திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் சங்கரகித்தாவை ஆதரித்தது இதனால் புத்தரகித்தாவும் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் எதிரிகளானர்கள்" என்று திருமதி விமலா தனது சாட்சியத்தில் கூறினார்.

"எனது கணவர் 'ஆலயத்தில் புரட்சி' என்னும் ஒரு நூல் எழுதினர். அதற்கு திரு. பண்டாரநாயக்கா மதிப்புரை எழுதியிருந்தார்." எக்ஸத்கந்த பெரமுனையில் திருமதி எஸ். ஏ. விக்கிரமசிங்கா என்னைச் சேர்த்த பொழுது தான் எனக்கு அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. திரு பண்டாரநாயக்காவின் நெருங்கிய நண்பர்களான எனது கணவரும், காலஞ்சென்ற திரு. எச். சிறி நிசங்காவும் அளித்த தூண்டுதலின் மீது 1952-ம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நான் சேர்ந்தேன். அதே வருடம் களனித் தொகுதியில் போட்டியிட்டேன்" என்று கூறிய திருமதி விமலா விஜயவர்த்தன அத்தேர்தல் பிரசாரத்தின் போது தனக்கெதிராக அநாகரிகமான முறையில் வதந்திகள் கிளப்பப்பட்டதாகவும் அதன் பின் தாம் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லையென்றும் திரு. பண்டாரநாயக்காவினதும் மற்றையோரினதும் வற்புறுத்தலினால் 1956-ம் ஆண்டுத் தேர்தலில் மீரிகமைத் தொகுதியில் போட்டியிட்டதாகவும் தெரிவித்தார்.

"தேர்தல் நெருங்கியதும் தகநாயக்காவின் பாஷாபெரமுனை, பிலிப் குணவர்த்தனவின் விப்ளவகரி சமசமாஜக் கட்சி ஆதியன சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்துகொண்டன. திரு. இரியகொலை, திரு. டி. பி. சுபசிங்கா ஆகியோரும் எம். ஈ. பி.யில் சேர்ந்தனர். திரு. பண்டாரநாயக்காவுக்கும் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கும் ஒத்துவராதென்பது எங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரியும். 1956-ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திரு. களுகல்ல சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார். அவரைக் கொண்டுவந்தது எனது மருமகன்" என்றும் திருமதி விமலா விஜயவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"1956-ம் ஆண்டுத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. ஆர். ஜி. சேனநாயக்காவை புத்தரகித்த ஆதரித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரித்தது- மீரிகமையில் இரண்டொரு கூட்டங்களில் பேசியதைத்தவிர எனக்காக புத்தரகித்த ஆதரவு தேடவில்லை. இதர பிக்குகள் வீட்டுக்கு வீடு எனக்காக ஆதரவு தேடினர்கள். தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் எனது கணவர் நோய்வாய்ப்பட்டார். அவரைக் கவனிப்பதற்காக நான் கொழும்புக்குத் திரும்பினேன்.


ரீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.

○ Ricardo Montalban
○ Vincent Price
in
THE
BLACK PIRATE
(Totalscope — Eastman colour)



வெற்றிகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)

விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

கல்யாணி (நாவலப்பிட்டி)





எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
மற்றும்பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்


## கூட்டுறவுசமாஜ கட்டிடத் திறப்புவிழா

ஊர்காவற்றுறை, புதன்

தீவுப்பகுதி பலநோக்க கூட்டுறவு சமாஜம் அதன் புங்குடுதீவு கிளைக்கு மண்டபம் ஒன்றை அமைத்துள்ளது.

வழக்கறிஞரும், சமாஜத் தலைவருமான திரு. பசுபதிப்பிள்ளை கதிரவேலு சென்ற சனிக்கிழமை புதிய கட்டிடத்தை குத்துவிளக்கேற்றி சைவாசாரமுறைப்படி திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக் கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினர். கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

## மைத்திரிபால இன்று வருவார்

கொழும்பு, புதன்

வர்த்தக, கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நாளை இலங்கை வந்து சேருவார். ஐக்கிய நாடுகள் வர்த்தக மகாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் அவர் தாயகம் திரும்புவார்.

# "இலங்கையரல்லாதார் பத்திரிகை நடத்தக்கூடாது"

## பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியம்

கொழும்பு, புதன்

'சிங்கள சமூகத்தையும் அதன் பண்பாடு, கலாசாரத்தையும் அழித்தொழிக்கவே சுதந்திரம் வேண்டுமென பத்திரிகைகள் கோருகின்றன" என்று பத்திரிகைக் கமிஷன் முன், இரத்மலானை அரசாங்க சேவை பௌத்த சங்கத்தின் சார்பில் நேற்று சாட்சியமளித்த திரு. கே. என். ஜயவீரா கூறினர்.

பௌத்தசூழலைஒழித்து நாட்டின் முன்னேற்றப் பாதையையும் தடுப்பதற்கும் பத்திரிகைகள் சுதந்திரம் கேட்கின்றன என்று ஜயவீரா கூறினர்.

'பத்திரிகைச் சுதந்திரம் என்ற போர்வையில் நாட்டுக்கு இழைக்கப்படும் சேதம் நிறுத்தப்படவேண்டும். சிங்கள பௌத்தர்களுக்கு எதிரானவர்களே பத்திரிகைக் கமிஷனை எதிர்ப்பார்கள்" என்றும் அவர் கூறினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

பத்திரிகைகளுக்கென செயல்நெறி முறையொன்று இருக்க வேண்டும். தேசிய பத்திரிகைகள் சேவைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டுமென எமது சங்கம் யோசனை கூறுகிறது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுச் செய்திகளுக்கும் இலங்கையிலிருந்து அனுப்பப்படும் உள்நாட்டுச் செய்திகளுக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். இலங்கையரல்லாதார் பத்திரிகைகள் நடத்த அனுமதிக்கக் கூடாது. பத்திரிகை ஏகபோகத்தை ஒழித்துக் கட்ட வழிவகைகள் காணப்பட வேண்டும். ஆசிரியசபைக்கு அதிக சுதந்திரம் இருக்கவேண்டும். செய்திகளுடன் நிருபர்களின் பெயர்களும் வெளியிடகபடவேண்டும்.

## 'நல்லதம்பி இறந்தும் இறவாதவர்'

### நினைவுமலர் வெளியீட்டு விழாவில் அஞ்சலி

ஊர்காவற்றுறை, புதன்

"இறந்தும் இறவாதவராய் புகழ் உடம்புடன் வாழ்ந்துகொண்டே இருக்கிறவர்களில் காலஞ்சென்ற திரு. நல்லதம்பி ஒருவராவார்."

ஊர்காவற்றுறை-கருவிலூரைச் சேர்ந்த நீர்கொழும்பு வாசியான திரு. நல்லதம்பியின் மறைவு குறித்து வெளியிட்ட திருமுறைத் தொகுப்பு நூலை வெளியிடுகையில் பண்டிதர் கே. பி. இரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. நல்லதம்பியின் அந்தியேட்டி வைபவத்தின்போது நீர்கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட நூல் வெளியீட்டு விழாவில் திரு. இரத்தினம் மேலும் பேசியதாவது;-

கொடைவள்ளலும், காலஞ்சென்றவருமான திரு. நல்லதம்பி தொண்டு செய்வதற்கே பிறந்தவராகக் காணப்பட்டார். வாழ்வாங்குவாழ்ந்துகாட்டினர் பொருளாதார வளர்ச்சிக்கு அரசனுக்கு அடுத்தபடிவாக வணிகனே உதவிபுரிகிறன். திரு. நல்லதம்பி என்றவர் தகர் தமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தார். அவர் செய்து முடித்த பெரும்பணிகளான இந்துவாலிபர் சங்கமும், விவேகானந்த வித்தியாசாலையும் அவருக்கு நல்ல நினைவுச்சின்னங்களாகும்.

நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலய அதிபர் வித்துவான் சோதிநாதனும் பேசினர்.


முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!





அதை ஒழியுங்கள்!

ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்டபின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.






டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 9-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — 'நாடும் நாமும்', 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை — கே. ஏ. கனகசபை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள் பாடுபவர் — எஸ். திருஞானசம்பந்தஓதுவார்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-15 துதிப்பாடல்கள் பாடுபவர் — எஸ். திருஞானசம்பந்தஓதுவார், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 ஆட்சியும் மக்களும் — மேனாட்டுத் தொடர் பில் பி. ரங்கசாமி — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி — கே. ஆர். கணபதி— புல்லாங்குழல். 8-40 குரல் இசை, 9-15 வீரபாரதம் — இசைச்சித்திரம், 1-00 இசைக் கோவை.

இந்திய பாடசாலை

# கிரிக்கெட் கோஷ்டி போட்டி விபரங்கள்

## முதலாவது "மோதல்" திங்கட்கிழமை இடம் பெறும்

கொழும்பு, புதன்

இலங்கை வரும் அகில இந்தியப் பாடசாலை கிரிக்கெட் கோஷ்டி, தனது முதலாவது கிரிக்கெட் போட்டியை எதிர்வரும் திங்கட்கிழமை நடாத்தும். செவ்வாய்க்கிழமையும் திங்கட்கிழமையும் நடைபெறும் இக்கிரிக்கெட் போட்டிகளில் கொழும்பு தேசிய பாடசாலை கிரிக்கெட் சங்கத்துடன் இந்தியப் பாடசாலைகள் கோஷ்டி மோதிக்கொள்ளும்.

15 பேர் கொண்ட அகில இந்திய பாடசாலை கிரிக்கெட் கோஷ்டிக்கு பம்பாயைச் சேர்ந்த கைலாஷ் கடாணி தலைமை வகிக்கிறார். இக்கோஷ்டியில், பம்பாயைச் சேர்ந்த ரமேஷ் நக்டியோ, ராம்னும் பாக்கர், எக்னுத் சொல்கர், கே. அஷார், டில்லியைச் சேர்ந்த இந்திரஜித் சிங், அசோக்கண்டோட்னு, வய்காளத்தைச் சேர்ந்த கே. கோஸ்ச், எஸ். கங்குலி, வடபஞ்சாப்பைச் சேர்ந்த செரண்டர் அமர்னுத், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த விஜேட் குப்தா, பரோடாவைச் சேர்ந்த டி. என். மஹிதா, மைசூரைச் சேர்ந்த பி கே. நியோகி, விதார் பாவைச் சேர்ந்த இம்ரால் அலி (உபகாப்டன), சென்னையைச் சேர்ந்த எட்மண்ட்ஸ் ஆகியோரும் உள்ளனர்.

### போட்டி விபரங்கள்

ஏப்ரல் 13-14: கொழும்பு தேசிய பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் போட்டி, ஏப்ரல் 16 மொரட்டுவையில் மொரட்டுவ பாடசாலைகளுடன்.

ஏப்ரல் 18: காலியில், காலி பாடசாலைகளுடன்.

ஏப்ரல் 20-21: கொழும்பில், கொழும்பு பாடசாலைகளுடன்.

ஏப்ரல்24-25: இலங்கை பாசாலை கிரிக்கெட் சங்கத்துடன் (கொழும்பு).

ஏப் 27-28: கண்டியில், கண்டி பாடசாலைகளுடன்.

ஏப் 30-மே 1: யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணப் பாடசாலைகளுடன்.

அகில இந்திய பாடசாலை கிரிக்கெட் கோஷ்டியினர் அடுத்த மாதம் 3-ம் திகதி இந்தியா செல்வார்கள்.




புத்துணர்ச்சியுடன்
திகழ கோயாவின்
புத்தம் புதிய
திவ்யமான,
மெல்லினிய
மணங்கமழும்
என்ட்டைஸ்
பாவியுங்கள்

ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்ட்டைஸ் பாவியுங்கள்.
அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ் கார்டீனியா
நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்


### கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அந்தந்த வேலைகளுக்கு நேரே காட்டப்படும் விகிதப்படி கந்தோரில் பணம்கட்டி 21-4-64 ந் திகதி மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். விபரங்கள் வேலை நேரங்களில் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

#### வேலைகள்

| வேலைகள் | கட்டுப்பணம் ரூ. ச |
|---|---|
| 1. மண்டைதீவு காரைப் புலரோட்டு வேலை | 25-00 |
| 2. மண்டைதீவு மருத்துவ மனை வீதி. | 25-00 |
| . அல்லைப்பிட்டி 1-ம் இல. ரோட்டு பகுதிவேலை | 10-00 |

க. கைலாசபிள்ளை,
தலைவர்
அல்லைப்பிட்டிக் கிராமசபை
அலுவலகம், மண்டைதீவு.
7-4-64 310

### திருஷ்ச்சரம் வள்ளிமலைக் கந்தசுவாமி கோவில்

#### அலங்கார உற்சவம்

9-4-64 வியாழன் 27-ந்திகதி தேவநாயகிமணவாளக்கோலம் ஆகியும் வள்ளிநாயகி களவு கனவு சம்பன்னஞ் சோதியுமே ஆகிய உற்சவம் மாலை மேணி.

10-4-64 வெள்ளி 28-ந்திகதி இரவு சப்பர உற்சவம்.

11-4-64 சனி 29-ந் திகதி மாலை 3 மணிக்கு ரதஉற்சவம்.

12-4-64 ஞாயிறு 30-ந்திகதி மாலை 4 மணிக்கு வையக் கிணற்றிலே தீர்த்த உற்சவம் நடைபெறும்



தேவர்களால் பூசிக்கப்பட்ட மகா சிவலிங்கம் மகான் மு. திருஞ் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரம்மஸ்ரீ கு. முத்துசாமிக் குருக்கள், ஆலய ஆதீன கர்த்தா, பிரதம குரு. 223

### காணி விற்பனை

பருத்தித்துறை தும்பளை பிராமண வீதியிலுள்ள பாட்டி குடியிருப்பு என்னும் இரண்டு பரப்பு வரையுள்ள காணி. மூன்று பக்க மும்மதில், கிணறு, சிறுமண்டபம், சுகாதார வசதியுடன் விற்பனைக்கு உண்டு.

விபரம்: க. செ. பாலசுப்பிரமணிய ஐயர், முருகமூர்த்தி கோவில், அனலைதீவு தெற்கு, அனலைதீவு 222

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க சமாஜத்தின் வருடாந்தக் கூட்டம் சமாஜத் தலைவர் சமூகஜோதி சி. தியாகராசா தலைமையில் வலி மேற்கு காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்றது. சமாசத்தின் நடப்பு வருட வேலைத் திட்டங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சமூகஜோதி. சி. தியாகராசா, செயலாளர்: திரு. நா. தங்கத்துரை, பொருளாளர்: திருமதி பேர்ள அத்தனசியார்.

## இலங்கையில் சீன நிபுணர்கள்

கொழும்பு, புதன்

சீனவிலிருந்து மூன்று நெசவு தொழில் நிபுணர்கள் நேற்று இலங்கை வந்து சேர்ந்தனர்.

குருணக்கலையிலுள்ள நெசவு நிலையத்திலுள்ள இலங்கையர்களுக்கு நெசவுத் தொழிலில் மேலும் பயிற்சிகள் அளிக்கும் பொருட்டு இவர்கள் இலங்கையில் மூன்று மாதகாலம் தங்கியிருப்பார்கள்.

### வரி விளம்பரம்

#### செலிம்ஸ்

புகைப்படத் தாபனத்தில் இப்பொழுது திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதனால் ஸ்டுடியோவில் படங்கள் பிடிக்கும் வேலை மாத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மற்றும் பிற இடங்களுக்குச் சென்று படம்பிடிக்கும் (out door) வேலைகள், டெவலப்பிங், பிரிண்டிங், முதலிய வேலைகள், செய்வித்துக் கொள்ளலாம். புது வருடதினத்திலிருந்து மீண்டும் சகல வேலைகளும் ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். 221

#### அரைச்சலர்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலர். 62

#### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

#### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவில் யாழ்ப்பாணம்,

#### விற்பனைக்கு

EN 874 மொறிஸ் மைனர் சின்ன வான் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் பார்வையிடலாம்.

திராவிட ஐக்கிய பண்டகசாலை, சுன்னுகம். 220

#### வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவிலுள்ள 32-ம் இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விலாசம்: க. திருநாவுக்கரசு, 42/4, சீராவியடி, யாழ்ப்பாணம். 324

#### மலிவு விற்பனை

30,000 பனங்கிழங்கு உடன் விற்பனைக்கு இருக்கிறது. மொத்தமாகவும் சில்லறையாகவும் கொடுக்கப்படும். விலை விபரங்களுக்குநேரில் தொடர்பு கொள்ளவும். இ. கனகசபை, முகமாலை, எழுதுமட்டுவாள். 219

#### IMPORTANT ANNOUNCEMENT

#### SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

#### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences. ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar. Jaffna. 212

# நாதஸ்வர மன்னன் காலமானூர்

## காருக்குறிச்சி அருணசலம் மறைவுக்கு தலைவர்கள் அனுதாபம்

திருநெல்வேலி, ஏப். 8

**நாதஸ்வர மன்னன், இசைச்செல்வன் காருக்குறிச்சி அருணசலம் திருநெல்வேலி ஆஸ்பத்திரியில் காலமானூர் என்பதை கலையுலக ரசிகர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்ரேம். சிலகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் நேற்றிரவு காலமானூர். அவரின் மறைவு கலையுலகுக்கு பெரும் நஷ்டமாகும்.**

காலம் சென்ற அகில இந்திய நாதஸ்வர சக்கரவர்த்தி திரு. ராஜரத்தினம் பிள்ளையின் சிஷ்யரான காருக்குறிச்சி அருணசலம், கர்னடக சங்கீதத்தில் சிறந்து விளங்கியதுடன் ராகம் வாசிப்பதில் தமக்கென ஒரு தனி இடத்தையும் தேடிக் கொண்டவர். அவரின் நாதஸ்வர இசை வெள்ளத்தில் பல அரசியல் தலைவர்களும் நாட்டுப் பிரமுகர்களும் மூழ்கியதுடன் மட்டுமின்றி பல பரிசுகளையும் பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கியிருக்கிறூர்கள்.

இந்தியாவில் மட்டுமின்றி இலங்கைக்கும் அவர் விஜயம் செய்து கலாரசிகர்களை இசை வெள்ளத்தில் மூழ்கச் செய்திருக்கிறூர். அவரின், "சிங்கார வேலனே" என்ற இசைராகம் ரசிகர்களின் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்று நாதஸ்வர இசைக்கலையை அங்கும் பரப்ப திட்டமிட்டிருந்த காருக்குறிச்சி அருணசலம், தமது குறிக்கோள் நிறைவேருமலே காலமானது–குறிப்பாக தமிழுலகத்துக்கு ஒரு மாபெரும் நஷ்டமென்றே சொல்லலாம்.

### தலைவர்கள் அனுதாபம்

காருக்குறிச்சி அருணசலத்தின் மரணம் குறித்து இந்தியாவின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் மற்றும் இலங்கை, சிங்கப்பூர் கலா ரசிகர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

## காயத்தை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பிள்ளை சென்று கொண்டிருந்தார். போஸட்மன் சந்திரசேகரம் ஒரு மரத்திற்கருகில் நின்று சிதம்பரப்பிள்ளையைக் கத்தியால் குத்தினூர்.

காலஞ்சென்றவர் குத்தப்பட்டதும் நான் 'ஐயோ''ஐயோ' சந்திரசேகரம் போஸ்ட் மாஸ்டரை கத்தியால் குத்திப் போட்டார்'எனக் கத்தினேன்.

காயமடைந்தவர் இடது கையால் காயத்தைப் பொத்திக்கொண்டு, மகாலிங்கம் கத்தியைப் பறியடா என்று கத்தினூர். உடனே மகாலிங்கம் எதிரிக்குப் பின்பக்கத்தால் வந்து கத்தியைப் பறித்தார். நான் கத்தியைக் கண்டேன். மகாலிங்கம், காயத்தைக் கட்டுவதற்கு துணி எடுத்து வரும்படி என்னிடம் கூறினூர். நான் துணி எடுப்பதற்காக சந்திரசேகரி மாஸ்டர் வீட்டிற்குப் போனேன். அவரிடம் சந்திரசேகரம் போஸ்ட் மாஸ்ட்டரை குத்திவிட்டார் என்று கூறினேன். அவர் வீட்டிற்குப் போய் வெள்ளைத் துணி வாங்கிவந்தேன். அவரும் என்னுடன் வந்தார். நாங்கள் காயத்தை துணியால் கட்டியதும் போஸ்ட் மாஸ்ட்டர் இறந்துவிட்டார். சில நிமிடங்கள் கழித்து சண்முகசுந்தரம் எதிரியைப் பிடித்துவந்தார்.

மேல் விசாரணை இன்று காலை 9–15 வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

# திரைசேரிக் காரியதரிசிமீது வழக்குத் தொடரப்படும்?

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுமாறு கட்டாயமாக நிர்ப்பந்திக்கப்பட்ட மூன்று உத்தியோகஸ்தர்களான கே. கந்தசாமி, எஸ். முத்துலிங்கம், எம். சின்னத்துரை ஆகிய மூவரும் திறைசேரியின் பதில் கூட்டு உதவிக்காரியதரிசி திரு. திலக் ஈ குணரத்ன மீது வழக்குத் தொடர்வது பற்றி பரிசீலனை செய்து வருகிறூர்கள், உத்தியோக மொழியில் தேர்ச்சியடையாத காரணத்துக்காக தமக்கு விதிக்கப்பட்ட கட்டாய ஓய்வை வாபஸ் பெறுமாறு கோரும் ரீதியில் வழக்குத் தாக்கல் செய்யப்படலாமென அறியப்படுகிறது.

இந்த மூவரின் சார்பிலும் அவர்களின் புரக்டர் லூசியன் வி. பெரேரா, திரு. திலக்குணரத்னவுக்கு அனுப்பியுள்ள அறிவித்தல் கடிதத்தில் திறைசேரியின் உதவிக்காரியதரிசி என்ற உத்தியோக தோரணையில் அவர் விடுத்த கட்டாய ஓய்வு அவருக்குள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டதென்றும், பிழையானதென்றும், சட்டத்திற்கு முரணனதென்றும் குறிப்பிட்டுள்ளார். திறைசேரியின் 560-ம், 620-ம், 638-ம் இலக்க சுற்றுநிருபங்கள் சட்ட விரோதமானதென்றும், நியாயமற்றதென்றும் அதனுல் அது செல்லுபடியாக முடியாதென்றும் அறிவித்தல் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க பொதுச்சேவை உத்தியோகஸ்தர்களுக்கும், நீதிபரிபாலன சேவை உத்தியோகஸ்தர்களுக்குமான ஓய்வு பெறுவதற்கான சட்ட விதிகள் 1964-ம் வருட ஜனவரி மாதம் 3-ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது இலங்கை அரசியல் சட்டத்திற்கு முரணனவகையில் இயற்றப்பட்டுள்ளதாகவும் அத்துடன் அரசாங்க பொதுச்சேவை ஊழியர்கள் ஓய்வுபெறும் சட்டவிதிகளுக்கிணங்காமல் இயற்றப்பட்டுள்ளதாகவும் வழக்கறிஞர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி இந்த கட்டாய ஓய்வு உத்தரவு அறவே செல்லுபடியாகாதென்றும் தெரிவித்துள்ளார்.

# சைப்பிரஸ் அதிபர் இன்று ஏதென்ஸ் செல்வார்

நிக்கோஸியா, ஏப். 8

கிரேக்க அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு சைப்பிரஸ் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் நாளை ஏதன்ஸ் செல்வார். அவர் இம்மாதம் 13-ந் திகதி வரை தங்கியிருப்பார்.

ஏதன்ஸ் செல்லும் அதிபர் மக்காரியோஸ் அங்கு இம்மாதம் 11-ந் திகதி முதல் 13-ந் திகதி வரை கிரேக்க அரசாங்கஅதிகாரிகளுடன் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்துவார்.

நேற்று நிக்கோஸியாவில் அதிபர் மக்காரியோஸ் நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில், சைப்பிரஸிலுள்ள துருக்கித் துருப்புக்களை துருக்கி அரசாங்கம் விலக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சைப்பிரஸில் 659 துருக்கி துருப்புக்கள் நிலைகொண்டிருக்கின்றனர் என்றும் இதுவிஷயமாக ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையில் தாம் முறையிடப் போவதாகவும் அவர் கூறினூர்.

"துருப்புக்களை நிலைகொள்ளசெய்யும்உடன்படிக்கையை சைப்பிரஸ் முறித்துக்கொண்டதால், இங்கு துருக்கி துருப்புககள் இருப்பது சட்ட விரோதமாகக் கணிக்கப்படும் என்றும் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் கூறினூர்.

இதுசம்பந்தமாக துருக்கி பிரதமர் திரு. இஸ்மத் இனேனு சைப்பிரஸ அதிபருக்கு தனிப்பட்ட முறையில் ஒரு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளார்.

## தொழிலாளர் . . ,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கவாதியுமான திரு. பாலதம்பு குறிப்பிட்டார்.

திரு. பாலதம்பு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:–

'கடந்த 20 வருடங்களிலும் தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க கூட்டு சம்மேளனம் அதிகாரமுள்ளதாகிவிட்டதுடன் இலங்கை வர்த்தக சங்கம் பலம்பொருந்திய தொழிற்சங்கமாகி விட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் விரோதியான திரு. ரி. பி. இலங்கரத்னவே இடதுசாரிகளுடன் கூட்டு அரசாங்கம் அமைக்க யோசனை தெரிவித்தவராவர். எந்த அரசாங்கமும் தொழிலாளர் ஒத்துழைப்பின்றி, நடைபெற முடியாதென்பதை அவர் உணர்ந்துவிட்டதே அதற்குக் காரணமாகும். இடதுசாரிகளின் ஒத்துழைப்பு அரசாங்கத்துக்குத் தேவையானுல் அது தொழிலாளர் வர்க்கத்தை அமைத்து வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளை ஒழித்துக்கட்ட வேண்டும்.

# அறவிடப்படும் தண்ணீர் வரி போதுமானதாகாது

## யாழ். மாநகரசபைக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,வியாழன்

யாழ்ப்பாணத்தில் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு மக்களிடமிருந்து அறவிடப்படும் 2 சதவிகித கூடுதல் வரி போதுமானதாகாது என உள்ளூர் ஆட்சி ஆணையாளர் யாழ்ப்பாண மாநகரசபைக்குத் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக உள்ளூர் ஆட்சி ஆணையாளர் யாழ்ப்பாண மேயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"தண்ணீர் விநியோகத்திட்டத்தின் செலவை ஈடுசெய்வதற்கு 2 சதவீத கூடுதலான சோலைவரித்தொகை போதுமானதாகாது. இத் தேவைக்கு மற்றைய வழிகளில்வரும் வருமானத்தைப் பாவிக்கவேண்டிய அவசியம் ஏற்படும். வருமானத்தில் ஏற்படும் கஷ்டம் காரணமாக நிர்வாகம் சீர்கெட்டு உடைந்துபோனுல் அதற்குச் சபையே முழுப்பொறுப்புடையதாகும்."

## மின்சார . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீயைப் போல் இப்பகுதியில் சூரிய வெப்பம் இருக்கும் இந்நேரத்தில் காற்றுடி இயங்க மின்சாரமில்லாததால் கோர்ட்டின் வேலைகள் தாமதப்பட்டதென்றும்,மின்சாரக் கோளாறு காரணமாக சுப்ரீம் கோர்ட்டின் வேலைக்கு வசதியீனம் ஏற்படுத்தப்பட்டது நேற்றுத்தான் முதற் தடவையல்லவென்றும் நாட்டின் உயர் நீதிமன்ற அலுவல்செய்வதற்கு வசதியீனததைக் கொண்டுவருவது கண்டனத்துக்குரியதென்றும் நீதியரசர் தற்காலிக மின்சார சுபரின்ரெண்டன் திரு. எஸ். டி. ஜீ. ஆறுமுகத்திற்கும், தற்காலிக போர்மன் திரு. எஸ். குமரையாவிற்கும் அறிவித்தார்.

நேரகாலத்திற்குள் திருத்தங்கள் செய்வதற்குக் காலை 8 மணிக்கே வேலை ஆரம்பித்தும் முடிக்க இயலாததற்குத் திரு. ஆறுமுகம் வருத்தம் தெரிவித்தார்.

கோர்ட்டின் வேலை எதுவிதமும் தாமதப்படாதவகையில் கோர்ட் வேலை நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திற்குள் அவ்வித வேலைகள் முடிக்கப் படவேண்டுமென்றும் கோர்ட்டைத் தாமதப்படுத்துவது மன்னிக்கக்கூடியதல்ல வென்றும் இக் குறிப்புக்களின் நகல்களை மாநகரசபை ஆணையாளருக்கும் முதல்வருக்கும் அனுப்பும்படியும் சுப்ரிம்கோர்ட் விகிதருக்கும் நீதியரசர் கட்டளையிட்டார்.

# 2கோடி பெறுமதியுள்ள ரயில் பெட்டிகள்

## சீனவிடமிருந்து இலங்கை வாங்கும்

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்க ரயில்வே பகுதிக்காக ரூ. 22,000,000 பெறுமதியான பிரயாணிகள் ரயில் வண்டிகளையும், சரக்கு வண்டிகளையும்மற்றும் ரயில்வே சம்பந்தப்பட்ட வாகனங்களையும் சீனவிடமிருந்து வாங்க இலங்கை அரசாங்கம் அங்கீகாரமளித்துள்ளது.

சீனவிடமிருந்து பெறவிருக்கும் ரயில் வாகனங்கள் சம்பந்தமாக ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா ஒரு பட்டியலைத் தயாரித்துள்ளார். இந்தப் பட்டியலைத் திறைசேரியும் அங்கீகரித்துள்ளது.

சீனப் பொருளாதார உதவித் திட்டத்தின்கீழ் பெறவிருக்கும் இவ்வுதவிகள் சம்பந்தமாக ஒரு நகல் உடன்படிக்கையொன்று இப்பொழுது தயாரிக்கப்பட்டுவருவதாக இலங்கை அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீனவிடமிருந்து பெற்ற ரயில்பெட்டிகள் திருப்திகரமாக இருக்கிறதென்று ரயில்வேப் பகுதி அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் வி. முத்துத்தம்பி கொண்டுவந்தார். இத்தீர்மானத்தை ஆதரித்து திரு. எஸ். கனகசுந்தரம் பேசுகையில், யாழ்ப்பாணத்தில் இரண்டாவது ஆஸ்பத்திரி ஒன்று அமைக்கவேண்டியது அவசியமும் அவசரமுமாகுமென்றும், இப்பொழுதுள்ள ஆஸ்பத்திரியில் நவீன சாதன வசதிகளிருப்பினும் அதிகரித்து வரும் மக்களின் தேவைகளையும் வளர்ந்து வரும் யாழ்ப்பாணத்தின் தேவைகளையும் நிறைவேற்ற முடியாதென்ருர். புதிய கட்டிடங்கள் நிறுவி ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க இடவசதி இல்லையென்றும் இரண்டாவது ஆஸ்பத்திரி அமைக்க வேண்டியது அவசியமென்றும் கூறினூர்.

## கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு சென்.தோமஸ் கல்லூரி கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கோஷ்டிக்குமிடையில், மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

நாளை சென். தோமஸ் கல்லூரிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்குமிடையில் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

செட்டிகுளம்

## கொலை முயற்சி வழக்கு

### எதிரிக்கு சிறை

யாழ்ப்பாணம், புதன்

கைபிழைபாடான கொலை முயற்சிக் குற்றம்செய்ததாக எதிரி ஒப்புக் கொண்டதால் செட்டிகுளம் கொலை முயற்சி வழக்கில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. எதிரிக்கு மூன்றரை வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்,

இவ்வழக்கில் வவனியாப் பகுதியைச் சேர்ந்த செட்டிகுளத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ந் திகதி அம்பலம் தம்பிராசாவை துப்பாக்கியினுல் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாக கந்தப்பு பொன்னையா என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக வழக்கறிஞர் திரு. எஸ். எஸ். ஆனந்தக்குமாரசாமி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி' சில்வா ஆஜரானூர்.

## கட்டாய ஓய்வுபெறும் 8-வது உத்தியோகத்தர்

கொழும்பு, புதன்

3 மாத கட்டாய ஓய்வு அறிவித்தல் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த ஆய்வுகூட உதவியாளர் திரு. கார்த்திகேசுவுக்கு வழங்கப்பட்டுள்ளது மூன்றுமாத அறிவித்தலுடன் ஓய்வு பெற கட்டாயப்படுத்தப்படும் 8-வது உத்தியோகத்தர் இவராவர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.